இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 92 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 26 – வியாழக்கிழமை 12 நவம்பர் 2026 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:85 - Issue 92 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 26 - Thursday 12 November 2026 - Trichy ★★ 10 Pages ₹ 5.00

ஒரேநாளில் 17 கொலைகள்! இந்தச் சோப்ளாங்கி ஆட்சியில், குற்றவாளிகளுக்குப் பயமுமில்லை! காவல்துறையினருக்குப் பாதுகாப்புமில்லை!

Part-time முதல்வர் விஜய்க்குப் பொறுப்பே இல்லை!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் விமர்சனம்!

சென்னை, நவ. 12 -

தமிழ்நாட்டில் நாள்தோறும் நடை பெற்று வரும் கொலைகள் குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில், "சட்டம் ஒழுங்கு ICU-வில்! ஆட்சி நிர்வாகம் கோமாவில்! Part-time முதலமைச்சர் விஜய்க்குப் பொறுப்பே இல்லை" என்று கடுமையாக விமர்சித் துள்ளார்.



தமிழ்நாட்டில் தீபாவளி தினத்தன்று மட்டும் 19 படுகொலைகள் அரங்கேறிய நிலையில், நேற்றும் 5 படுகொலைகள் அரங்கேறியுள்ளன. இரண்டு நாட்களில் 24 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்ப வம் தமிழ்நாட்டையே உலுக்கியுள்ளது..

தேனியில் சாலையை மறித்து பட்டாசு வெடித்து ரீல்ஸ் எடுத்த போதை கும்பலை, தட்டிக்கேட்ட காவல்துறை சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் அடித்துக்கொலை செய்யப்பட்டார்.

திருச்சியில் 2 சிறுவர்கள் உட்பட 4 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ள னர். கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 படுகொலைகள் அரங்கேறியுள்ளன. சென்னை பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட வியாசர்பாடியில் தனுஷ் எனும் 18 வயதுஇளைஞரும்,திருவொற்றியூரில் பவித்ரன் என்ற இளைஞரும் ஓட ஓட வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

இதேபோல், சிவகங்கை, விருது நகர், மாவட்டங்களில் தலா 2 படு கொலைகள் அரங்கேறியுள்ளன. தேனி, கடலூர், பெரம்பலூர், கள்ளக் குறிச்சி, திருவள்ளூர், திருநெல்வேலி, மதுரை, வேலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் தலா ஒருவர் படுகொலை என கடந்த



2 நாட்களில் மட்டும் தமிழ்நாட்டில் 24 படுகொலைகள் அரங்கேறியுள்ளன.

இதற்கிடையே, தமிழ்நாட்டில் நிகழ்ந்த படுகொலை தொடர்பான

"சட்டம் ஒழுங்கு ICUவில்! ஆட்சி நிர்வாகம் கோமாவில்!

செய்திகளே நாளேடுகளை ஆக்கிரமித் துள்ளன.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்து கொலை சம்ப வங்கள் அதிகரித்து வருவதாக முன் னணி நாளேடுகள் செய்தி வெளியிட்டுள் ளன. தீபாவளி நாளன்று அரங்கேறிய இத்தனை படுகொலைகள் மக்களை அச்சத்தில் உறைய வைத்திருப்பதாக Times Of India, The Hindu, Indian Express, Deccan Choronicle, தினமலர், தினத்தந்தி, தினகரன், இந்து தமிழ் திசை உள்ளிட்ட நாளேடுகள் முதன் மைச் செய்தியாக வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து நேற்று (10.11.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு :-

"சட்டம் ஒழுங்கு ICUவில்! ஆட்சி நிர்வாகம் கோமாவில்!

ஒரே நாளில் 17 கொலைகள்!

குழிதோண்டிப் புதைக்கப்பட்ட சட்டப் பேரவைத் துணைத் தலைவர் பதவி யின் மாண்பு!

பெண் மாவட்ட ஆட்சியருக்கு ஆபாசக் குறுஞ்செய்தி அனுப்பிய தாக TVK MLA மீது குற்றச்சாட்டு!

இந்தச் சோப்ளாங்கி ஆட்சியில்,

குற்றவாளிகளுக்குப் பயமில்லை!

காவல்துறையினருக்குப் பாதுகாப் பில்லை!

த.வெ.க.வைச் சேர்ந்த மக்கள் பிரதி நிதிகளுக்குக் கட்டுப்பாடில்லை!



மொத்தத்தில்,

Parttime முதலமைச்சராகவும், Fulltime Content Creatorஆகவும் இருக்கும் விஜய் அவர்களுக்குப் பொறுப்பே இல்லை!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

கொலைகளைக் கண்டு தமிழ்நாடே பதறினால் 'பண்டிகை காலக் கொலை' என்கிறது வெட்கங்கெட்ட த.வெ.க. அரசு!

துப்பாக்கிக் கலாச்சாரத்தையும் 'உதவாக்கரை' ஆட்சியினர் கொண்டுவந்து விட்டனர்!

குற்றங்களைத் தடுக்க டம்மி முதல்வர் விழிப்பாரா?

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, நவ. 12 -

கொலைகளைக் கண்டு தமிழ்நாடே பதறினால் பண்டிகைக் காலக் கொலை என்கிறது வெட்கங்கெட்ட த.வெ.க. அரசு. துப்பாக்கிக் கலாச்சாரத்தையும் சோப் ளாங்கி ஆட்சியினர் கொண்டுவந்து விட் டனர் என்றும், குற்றச் சம்பவங்களைத் தடுக்க டம்மி முதல்வர் விழிப்பாரா? என்றும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதி வில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

சட்டம், ஒழுங்கு சீர்கேட்டையும் தன் சட்டமன்ற உறுப்பினர்களின்



ஆட்டத்தையும் எப்போது கட்டுப்படுத்து வார் டம்மி CM?

தமிழ்நாட்டில் இதுவரை இல்லாமல் இருந்த துப்பாக்கிக் கலாச்சாரத்தை இந்த சோப்ளாங்கி ஆட்சியாளர்கள் கொண்டு வந்துவிட்டார்கள்.

குடியாத்தம் அருகே ஞானவேல் என்பவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டு இருப்பது அதிர்ச்சி அளிக் கிறது.

ஒரே நாளில் 9, 11, 13 என நிமிடத்துக்கு நிமிடம் கொலைகளின் எண்ணிக்கை ஏறிக்கொண்டே போவதை பார்த்து தமிழ்நாடே பதறி னால் அதெல்லாம் 'பண்டிகை காலக் கொலைகள்' என்கிறது வெட்கங்கெட்ட அரசு.

நுங்கம்பாக்கத்தில் பெட்ரோல் குண்டு வீசப்பட்ட சம்பவத்தை 'எரியும் பொருள்' என்கிறது காவல்துறை.

குற்றச்சம்பவங்களை Cover Up செய்ய, இவர்கள் வைக்கும் பெயர் களைக் கொண்டு தனி dictionaryஏ போடலாம்.

தேனியில் காவலர் கொல்லப்பட்ட சம்பவத்தில், பணியில் இருந்த போது கொல்லப்பட்டார் என்று Dummy CMம், பணியில் இல்லாத போது கொல்லப்பட் டார் என்று CM-ன் காவல்துறையும் முரண்பட்ட அறிக்கைகளை விடுகின்றனர்.

மிரட்டல் - அடிதடி - கட்டப்பஞ்சா யத்து - கமிஷன் - பாலியல் தொல்லை என ஆளுங்கட்சி MLAக்களின் attrocity யால் சாமானியர் முதல் பெண் IAS அதி காரி வரை பாதிக்கப்படுகிறார்கள்.

இது எதற்கும் வாயை திறக்காமல், பொறுப்பேற்காமல், Sleep Modeஇல் இருக்கும் முதலமைச்சர், உடனே விழித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

செஞ்சியில் - மீண்டும்

7 வயது சிறுமி கடத்தல்!

போலீஸ் விசாரணை!

விழுப்புரம், நவ. 12 - விழுப்புரம் மாவட் டத்தில் மீண்டும் 7 வயது சிறுமியை ஆட்டோவில் கடத்த முயற்சித்ததாக போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள் ளது. விழுப்புரம் மாவட் டம், செஞ்சி அடுத்த ஜெயங்கொண்டான் கிராமத்தைச் சேர்ந்தவர் அசோக் குமார். இவரது 7 வயது மகள், அப்பகுதி யில் உள்ள தனியார் பள்ளியில் 2ம் வகுப்பு படித்து வருகிறார். நேற்று முன்தினம் இரவு சுமார் 7 மணியளவில் அந்த சிறுமி கிராமத்தில் உள்ள பெட்டிக்கடைக்கு சென்றுள்ளார்.

அப்போது ஆட்டோ வில் வந்த அடையாளம் தெரியாத மர்ம நபர்கள், சிறுமியை கடத்த முயன் றுள்ளனர். இதனால் அதிர்ச்சியடைந்த சிறுமி சத்தம் போட்டு அலறி யுள்ளார். சிறுமியின் அல றல் சத்தம் கேட்டு பொது மக்கள் ஓடிவருவதை பார்த்த மர்ம நபர்கள், சிறுமியை சாலையிலேயே விட்டுவிட்டு ஆட்டோ வில் தப்பிச் சென்றுள்ள னர். இதுகுறித்து சிறுமி யின் பெற்றோர் செஞ்சி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அந்த புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

இதனிடையே, கடந்த அக்டோபர் 11ஆம் தேதி ஆலம்பூண்டி அருகே தனது தாயுடன் தூங்கிக் கொண்டிருந்த 7 வயது சிறுமி ஹேமலதா அதிகாலையில் மாயமான சம்பவம் பெரும் அதிர்ச் சியை ஏற்படுத்தியிருந் தது. 30 நாட்கள் ஆகியும் மாயமான சிறுமி குறித்து எந்தவித தடயமும் கிடைக்கவில்லை. இதுகு றித்து சி.பி.சி.ஐ.டி. போலீ சார் தொடர்ந்து தீவிர விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், மீண் டும் ஜெயங்கொண்டான் கிராமத்தில் 7 வயது சிறுமியை மர்ம நபர்கள் கடத்த முயன்றதாக கூறப் படும் சம்பவம் செஞ்சி பகுதியில் பெரும் பர பரப்பை ஏற்படுத்தியுள் ளது.